பக்கங்கள் ஆறு

யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம்

ரூபா 5-00

உள்ளே

மருத்துவ விளக்கம்


# வலம்புரி
VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 01 செவ்வாய்க்கிழமை (17-10-2000) தொலைபேசி:- 3378 ஒலி: 302


சிறுபான்மை இனமக்கள்

## மந்திரிகளாகி நாட்டை ஆழ்வதா? சிங்களதேசியம் இணையவேண்டும்

### பௌத்த பேரினவாதம் ஆதங்கம்

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் பெரும்பான்மை இனக்கட்சிகள் இரண்டும் அறுதிப்பெரும்பான்மைப் பலம் பெறாமையால் சிறுபான்மை இனத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள் நாட்டை ஆட்டிப்படைக்கும் சந்தர்ப்பத்தை வழங்காமல் சிங்களக் கட்சிகளை இணைத்து தேசிய அரசுஒன்றை அமைக்க வேண்டும் என்று மகாநாயக்க தேரர்கள் ஐக்கிய தேசியக் கட்சியிடமும் பொது ஜனஐக்கிய முன்னணியிடமும் கோரிக்கை விடுத்துள்ளன. சிங்களக் கட்சிகளை இணைத்து தேசிய அரசு அமைக்க (6ம் பக்கம் பார்க்க)

## புதிய அமைச்சரவை நாளை பதவியேற்கும்!

(கொழும்பு)

பதினோராவது பாராளுமன்றத்தின் புதிய அமைச்சரவை நாளை புதன்கிழமை பதவியேற்கவுள்ளது. இப்புதிய அமைச்சரவையில் புதிய முகங்களும் இடம்பெறவுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தினேஷ் குணவர்த்தன, டக்ளஸ் தேவானந்தா, சுனில்பிரேமஜயந்த, ரவூப்ஹக்கீம் ஆகியோரே அமைச்சரவையில் இடம்பெறவுள்ள புதிய அமைச்சர்களாவர்.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மாகாணசபை முதலமைச்சர்களுக்கும் அமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந)

# ★ விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கைஅரசு மீண்டும்தொடரும்!

## நோர்வே பத்திரிகைக்கு லக்ஷ்மன்கதிர்காமர் பேட்டி

(நமது விசேட நிருபர்)

**இலங்கையில் நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு நோர்வே அரசின்அனுசரணையுடன் சமாதான முயற்சிகளை பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு மீண்டும் தொடரவுள்ளது. இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காண்பதில் நோர்வே அரசு அனுசரணையாளராக செயற்படுவதில் இலங்கை அரசில் பாரதூரமான கருத்து முரண்பாடுகள் எதுவும் இல்லை.**

இவ்வாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் 'நோர்வே போஸ்ட்'டுக்கு அளித்த பேட்டி ஒன்றில்கூறியுள்ளார்.

கொழும்பில் உள்ள 'நோர்வே போஸ்ட்' பத்திரிகையின் செய்தியாளர் ஆவ்றன் ஒஸ்டனினுக்கு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பேட்டி அளித்திருந்தார்.

அப் பேட்டியை 'நோர்வேர் போஸ்ட்' நேற்று முன்தினம் (6ம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி அமைச்சராக ரவூப் ஹக்கீம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு இரண்டு மந்திரி பதவிகளும் மூன்று பிரதி அமைச்சர் பதவிகளும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் ரவூப் ஹக்கீம், திருமதி பேரியல் அஷ்ரப் ஆகிய இருவருக்கும் மந்திரி பதவிகளும், முகைதீன் அப்துல் காதர் (மட்டக்களப்பு), இ. எல்.எவ். முகைதீன் (அம்பாறை மாவட்டம், அசூர்(வன்னிமாவட்டம்) ஆகியோருக்கு பிரதியமைச்சர் பதவிகளும் வழங்கப்பட்டுள்ளன,

ரவூப் ஹக்கீமுக்கு உள்ளூராட்சி, பெருந்தெருக்கள் அமைச்சு வழங்கப்பட்டன என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## அமைச்சர் பதவிக்காகஅலைந்து

## பொ.ஐ.ஐமுன்னணிக்கு 10 நாள் அவகாசம்

பொதுஜன ஐக்கிய முன் ... விடுத்துள்ளார்.

# அமைச்சர் பதவிக்காக அலைந்து திரியமாட்டேன் என்கிறார் பௌசி!

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் எந்தவொரு அமைச்சுக்கும் அலைந்து திரியமாட்டேன். அமைச்சரவையில் ஜனாதிபதி எனக்கு உரிய இடம் தருவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

என்று முன்னாள் அமைச்சர், ஏ.எச்.எம்.பௌஸி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் அமைச்சரவைக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியிடம் இருந்து அழைப்பு வந்தால் எந்த அமைச்சானாலும் அதனை ஏற்றுக்கொள்வேன் என்றும் கூறினார்.

கடந்த தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற முஸ்லிம் எம்பிக்களுள் ஆகக்கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றவர் ஏ.எச்.எம்.பௌசி என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

# 10 நாள் அவகாசம்

பொதுஜன ஐக்கிய முன்னணி 10 நாட்களில் தமது கோரிக்கையை நிறைவேற்றாவிட்டால் அரசுக்கான ஆதரவு மீளப்பெற்றுக் கொள்ளப்படும்.

இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் துணைத்தலைவர்களில் ஒருவரான ரவூப் ஹக்கீம் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.

சுயாதீன தேசிய ஆணைக்குழு சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு, சுயாதீன பொதுச்சேவை ஆணைக்குழு ஆகிய குழுக்களையும் பத்து நாட்களில் அமைக்க வேண்டும் என அவர் தனது கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

# தென்மராட்சிப் பகுதியில் மீண்டும் 'மிக்27' ரகவிமானங்கள் குண்டுவீச்சு

(சுண்டுக்குளி)

தென்மராட்சிப்பகுதியில் மீண்டுமொரு படை நடவடிக்கை ஆரம்பமாவதற்கு முன்னோடியாக 'மிக் 27' ரக யுத்த விமானங்கள் நேற்று பூநகரி, கல்முனைப் பகுதிகளில் குண்டு வீச்சுக்களை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நண்பகலுக்குப்பின் இரண்டு மூன்று தடவைகள் குண்டு வீச்சு விமானங்களும், உலங்கு வானூர்திகளும் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலின் போது ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை. (வ)

# ★ தேர்தல் வெற்றி குறித்து ஜனாதிபதி சந்திரிகாவிற்கு பிரதமர் வாஜ்பாய் பாராட்டு

(புதுடில்லி)

இலங்கையில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தல் ஜனாதிபதி தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி கூடிய இடங்களில் வெற்றி பெற்றதைப் பாராட்டி பிரதமர்வாஜ்பாய்

(6ம் பக்கம் பார்க்க)

# புலிகளிடமிருந்து நாட்டைபாதுகாக்க அரசாங்கம் அதிக கவனம் எடுக்கும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து நாட்டை மீட்பதே அரசாங்கத்தின் முதலாவது கடமையும் பொறுப்புமாகும்.

இவ்வாறு கொழும்பில் நேற்று பிரதம அலுவலக அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய புதிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் புலிகளின் பிடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு ஆகக் கூடுதலான கவனம் செலுத்தப்படுவதோடு, அதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்

(6ம் பக்கம் பார்க்க)

# புலிகள் சரமாரியில் உயிரிழந்தோர்

[வவுனியா]

புளியங்குளத்தில் தவறுதலாக எற்பட்ட வெடிவிபத்தொன்றில்

- ரட்ணராசா செல்வகுமார் [துணுக்காய்]
- வாசுகி

(6ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாள்தமி

**சிறு விளம்பரம்**

**சீமெந்துக் கூரை ஓடுகள் (LMCRS) லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை (இணுவில்)**

ஜீ. ரி. சற், அரசசார் பற்ற நிறுவனங்களால் புனரமைப்பு செய்யப்படும். வீட்டுத் திட்டங்கள், பாடசாலை கட்டடங்கள் போன்றவற்றிற்கு பயன்படும் சீமெந்துக்கூரைஓடுகள், முகட்டோடுகள் விற்பனைக்குண்டு.

இயந்திரம்மூலம் தயாரிக்கப்படும் கொங்கிறீற் கற்களும் விற்பனைக்குண்டு. தொழிற்சாலையும், விற்பனை நிலையமும் லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை இணுவில்.

(1832)


# ஆத்மீகத்துடன் இணைந்துகல்விகற்பதன் மூலமே

# மனித உன்னதத்தை எளிதில் அடையலாம்

## பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் தெரிவிப்பு

(தென்மராட்சி நிருபர்)

மனித உன்னதத்திற்கான கல்வி ஆத்மீகத்துடன் இணைந்து இருக்கவேண்டும். மனித உன்னதம்மிகவும்கஸ்டமானசொற்பதமகுாம். எமது வாழ்வை அன்பு நிலையிலும் அறிவு நெறியிலும் வளப்படுத்த வேண்டும். ''கல்வியின் நோக்கம் ஒழுக்கம்'' என பகவான் ஸ்ரீசத்ய சாயிபாபா கூறியுள்ளார். கல்வியின் நோக்கம் என்ன என்பவை எம்மவர்கள் இன்னமும் புரியாமலே இருக்கின்றனர். நாம் எமது வாழ்வில் எதை மதிக்கின்றோமோ அதுவே நடக்கின்றது. மனிதனை ஒன்றிணைப்பது அவனது மனச்சாட்சியாகும். நாம் 21 ஆம் நூற்றாண்டில் புதியமாறுதல்களைக் காணவேண்டும். ஆத்மீகத்தினை நாம் சரியாக உணர்ந்து செயல்பட வேண்டும். திரிகரணசுத்தியை நாம் மேம்படுத்திக்கொள்ள வேண்டியது மிகமிக அத்தி ாவசியமாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் கடந்த சனிக்கிழமை பரமேஸ்வரா அறக்கட்டளையின் அனுசரணையுடன் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட சேர். பொன் இராமநாதன் நினைவுப் பேருரையைநிகழ்த்திய வாழ் நாள் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம்(நந்தி) குறிப்பிட்டார்.

பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சிக்கு மண்டபம் நிறைந்த ஆர்வலர்கள் குழுமியிருந்தனர்.

துணைவேந்தர். பேராசிரியர். பொ. பாலசுந்தரம் பிள்ளை தனது தலைமையுரையின் போது.

**பல பரிமாணங்களைக் கொண்டது**

இந்த நாட்டில் தமிழ்தேசியத்துக்கு ஒரு நூற்றாண்டு காலமாக நல்ல தலைமைத்துவத்தை வகித்து வந்த சேர். பொன் இராமநாதன் மிகவும் உயர்ந்த ஒரு தலைவராவார். பல பரிமாணங்களைக் கொண்ட அவரின்புகழ்நாமம் இன்றும் எம் நாட்டில் மிகவும் பசுமையாகவுள்ளது. அவர் அரசியலில் காத்திரமான பணிகளைச் செய்து இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து இன மக்கள் மத்தியிலும் இன்றும் நினைவு கூறப்பட்டுவருகின்றார் சேர். பொன். இராமநாதன் அரசியல், கல்வி, ஆத்மீகம், சேவை போன்ற துறைகளில் தமிழ் சமூகத்தின் விடிவெள்ளி போல வாழ்ந்தவர்.

சேர். பொன். இராமநாதன் நினைவுப்பேருரையைத் தொடர்ந்து நிகழ்த்தியபேராசிரியர். செ. சிவஞானசுந்தரம் தனது உரையில்.

அரசியல்வாதிகள் உண்மை நேர்மை நீதி என்று பேசுவதெல்லாம்வெறும்சுலோகமே. கொள்கை இல்லாத அரசியல் ஒழுக்கம் இல்லாத கல்வி போன்றவற்றினால் யாருக்குமே பயன் இல்லை. நாம் உண்மையுள்ளவர்களாகவும், நேர்மையுள் ளவர்களாகவும், அன்புள்ளவர்களாகவும் இருத்தல் மிகவும் அவசியம். எமது எண்ணம், சொல், செயல் யாவற்றிலும் ஒருங்கிணைந்த செயல்பாடுவேண்டும்.

வாழ்க்கையில் அன்பு, சத்தியம், தர்மம், சாந்தி, அகிம்சை ஆகிய ஐந்து மேம்பாடுகளை நாம் பின் பற்றி வாழவேண்டும். அன்பின் மூலமே மனிதனின் ஆத்மாவை அறிய முடியும். அன்பில்லாது விடின் மனிதன் மனிதனாக வாழ முடியாது.

சேர். பொன். இராமநாதன் தனது வாழ்வில் தியானத்துக்கும், பிரார்த்தனைக்கும்கூடிய கவனம் செலுத்தி வந்தார். அவரது கனவுகள் நினைவுகளை நாம் செயல்படுத்த கல்வியில் ஆத்மீகத்தினை இணைத்துக் கொள்ள வேண்டும். அந்த வகையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் 21 ஆம் நூற்றாண்டில் ஆத்மீக பீடம் ஒன்றினை உருவாக்க வேண்டும். இந்து நாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம் யாவற்றையும் இவ் உத்தேச பீடத்தில் இணைக்கவேண்டும். அத்தோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களும் மாணவர்களுக்கும். சமுதாயத்துக்கும் முன் உதாரணமாகத் திகழ வேண்டும்.

**மிருகம் அல்ல**

மேலும் மனிதன் மிருகம் அல்ல மனிதன் தெய்வாம்சம் உள்ளவன். எம் மத்தியில் இன்று நல்லவர்கள் ஊமையாக இருப்பதால் தான் சமுதாயத்தில் நல்லவை இடம் பெறாமல் இருக்கின்றன. மனித உன்னதத்திற்கு ஒரு புதிய முறைக்கல்வி தேவையாகும். இந்தவகையில் பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவின் மனிதமேம்பாட்டுக்கான கல்வியே சாலவும் பொருத்தமானதாகும். அதனை எமது நாட்டில் அமுல் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன எனவும் இன்றைய காலகட்டத்தில் எமது சமுதாயம் யாழ்ப்பாணத்தில் புதிய சமூகமாகப் பரிணாமித்துள்ளது. நிரந்தரம் யாவும் உடைந்துதற்காலீகமாகி விட்டது. இன்றைய தேவை ஆத்மீகசுகம். ஆத்மீக ஞானம் என்று கூறினார்.

பல்கலைக்கழகத்தின் பதில் கலைப் பீடாதிபதி பேராசிரியர். கே. கோபாலகிருஸ்ண ஐயர் நன்றியுரை கூறினார்.

(க-77)

# தேசியப் பட்டியலில் யோகராஜன் எம். பி

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் போட்டியிட்டு தோல்வியடைந்த முன்னாள் எம். பி ஆர். யோகராஜனுக்குதேசியப்பட்டியல்மூலம் எம். பிப்பதவி வழங்கப்பொது ஜனஐக்கிய முன்னணி முன்வந்துள்ளது.

இது தொடர்பாக இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்ஆறுமுகம்தொண்டமான் பேசியதையடுத்தே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை பதுளையில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறுவதற்கு அடிப்படையாக இருந்த மலையக முன்னணியைச் சேர்ந்த கே. வேலாயுதத்திற்குஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப் பட்டியலில் எம். பிப்பதவி வழங்கப்படுமெனவும் தெரிய வருகிறது.

இதன் மூலம் மலையகத்தில் இரண்டு தமிழர்கள் எம். பிக்களாகும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

(ந)

# வவுனியாவைச் சேர்ந்த இளைஞர் மாத்தறையில் கைது செய்யப்பட்டார்

(மாத்தறை)

வவுனியாவைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் சந்தேகத்தின் பெயரில் நேற்று மாலை மாத்தறையில்பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தயாபரன்எனும் மேற்படி நபர் மாத்தறை ரத்வத்தை தோட்டத்திலுள்ள தன்னுடைய உறவினர் வீட்டில் தங்கியிருந்த போதே கைதுசெய்யப்பட்டார்.

இந்த நபருடன் மேலும் கொழும்பில் இருந்து அப்பகுதிக்குச் சென்ற ஓர் யுவதியும் இளைஞனும் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர்.

அப்பகுதிக்குச் சென்று பொலிஸ் பதிவினை மேற்கொள்ளாமையே இவர்கள் கைதுக்கான காரணமெனவும், இவர்கள் மீதான விசாரணைகள் தொடர்வதாகவும் மாத்தறை பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

(க-த)

# உடல் ஊனமுற்ற நிலையில் 903 பேர் கிளிநொச்சி மாவட்டத்தில் அவதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 903 பேர் உடல் ஊனமுற்று வாழ்வதாக கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் இடம்பெற்று வந்த யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு ஊனமுற்று பல அவல நிலைகளை இவர்கள் எதிர்நோக்குகின்றனர்.

# பயிற்சி நிலையம் ஆரம்பம்

(தென்மராட்சி)

திருநெல்வேலியிலுள்ள பகவான் ஸ்ரீசத்யசாயி சேவை நிலையத்தில்சத்யசாயி மனித மேம்பாட்டுக்கல்விப் பயிற்சி

# நடந்து முடிந்த தேர்தலில் எமது கட்சி பெரும் வெற்றி

## சிஹல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள்விடுதலை முன்னணியுடன் ஒப்பிடுகையில் தமது கட்சிப் பெரும் வெற்றியீட்டியுள்ளதாக சிஹல உறுமயக் கட்சி பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

35 வருடங்கள் பழமை வாய்ந்த மேற்படிகட்சி நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலின் போது 6 சதவீத வாக்குகளையே பெற்றுள்ளது.

எமது கட்சி ஆரம்பித்து நான்கு மாதங்களே கடந்துள்ள போதும் இத் தேர்தலின் போது 1.5 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது அமோக வெற்றியே எனக் கூறினார்.

இதேவேளையில் உலக மக்களால் வெறுத்து ஒதுக்கப்படும்மார்சிக கோட்பாட்டை இலங்கை மக்கள் மீது திணிப்பது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-த)

# வெடிப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன

கிளிநொச்சி மாவட்டத்தில் 903 பேர் உடல் ஊனமுற்று வாழ்வதாக கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் ஊனமுற்றவர்களில் 550 பேர் ஆண்கள் எனவும், 353 பேர் பெண்கள் எனவும் கூறப்படுகிறது.

அண்மைக் காலங்களில் இடம்பெற்று வந்த யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு ஊனமுற்று பல அவல நிலைகளை இவர்கள் எதிர்நோக்குகின்றனர்.

வெளிநாட்டு நிறுவனங்களோ, மனிதநேய அமைப்புகளோ இவர்கள் விடயத்தில் கவனம் செலுத்தவில்லையென சம்மந்தப்பட்டோர் கவலை தெரிவிக்கின்றனர்.

(த)


## மீண்டும் சுன்னாகத்தில்

'ஒளியகம்' என்ற பெயருடன் (பழைய ''சுடரொளி'' முன்பாக, சுன்னாகம் பல நோ. கூ. சங். காரியாலயத்திற்கு அருகே) K.K.S. வீதியில் அந்தியகால சேவையை ஆரம்பித்திருக்கிறோம்.

★ அழகிய பேழைகள் ★ பிரேதஊர்தி
★ மலர் வளையம் ★ எம்பாமிங் சேவை

குறைந்த செலவில் நிறைந்த சேவைக்குத் தொடர்பு கொள்ள.

## இல. 76, ஒளியகம்
## அந்தியகால சேவை

K.K.S. வீதி,
சுன்னாகம்.

கிளை:- 60, மணிக்கூட்டு வீதி,
யாழ்நகர்.
T.P - 0094 - 212070
LOCAL - 021 - 3192

(கி.902)


திருநெல்வேலியிலுள்ள பகவான் ஸ்ரீசத்யசாயி சேவை நிலையத்தில்சத்யசாயி மனித மேம்பாட்டுக்கல்விப் பயிற்சி நிலையம் ஒன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பயிற்சி நிலையம் இதுவாகும். உலகில் இது போன்ற பயிற்சி நிலையம் 75க்கு மேற்பட்ட நாடுகளில் இயங்கிவருகின்றன.

(க-77)

## வெளியூர் தபால்கள நாளை வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கான வெளியூர் தபால்கள் அடங்கிய பொதிகள் நாளை புதன் கிழமை செஞ்சிலுவைச் சங்க கப்பல் மூலம் எடுத்துவரப் படவுள்ளதாக யாழ் தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை தற்போது குடா நாட்டில் நிலவும் முத்திரைத் தட்டுப்பாடு குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும்விரைவில் அவற்றை எடுத்து வருவதற்கான ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.பிரதமதபாலதியர் எஸ். மார்க்கண்டன் தெரிவித்தார்.

(க-3)

ளது.

எமது கட்சி ஆரம்பித்து

...கொள்ள முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-த)

## வெடிப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன பஸ்ஸறைப் பகுதியில் சம்பவம்

(கொழும்பு)

ஆக்கிரதென்ன பகுதியில் மின்மாற்றியைத் தகர்ப்பதற்காக இனந்தெரியாதோரால் வைக்கப்பட்ட நேரம் குறித்து வெடிக்கும் வெடிபொருளை கைப்பற்றியுள்ளதாக பஸ்ஸறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையினால் 300 கிராம் எடையுள்ள இக்குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

இக்குண்டில் குறித்த நேரத்துக்கு வெடிக்கும் வகையில் நேரக்கணிப்பீட்டுக்கடிகாரம் காணப்பட்டதாகவும் இதுசம்மந்தமான விசாரணைகள் தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் பஸ்ஸறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் டீ. அழகப் பெருமாள் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இப்பகுதியில் கடந்த மாதம் 16 ஆம் திகதி இருமின்மாற்றிகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

(க-2)

## மாகாண கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபருக்கு வேண்டுகோள்

(திருமலை)

வளர்ந்து வரும் மாணவச் சமுதாயத்தினரிடம் வாசிப்புத் திறனை அதிகரிக்கச் செய்தல் வேண்டுமென மாகாணக் கல்விப்பணிப்பாளர்விசிவனாந்தன்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக பாடசாலை நூலகங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை அதிபர்கள் மேற்கொள்ளுமாறு பணித்துள்ளார்.

ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் மாணவர்களிடையே வாசிப்புத் திறனை வளர்க்கும் தூண்டிகளாகச் செயற்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க - த)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



## இன்று ஒரு தகவல்

### வேலைக்காரனின் நாணயம் வைர மாலையுடன் காணாமல் போனது

பொன்னூரில் பொன்னம்பலம் என்ற பணக்காரரின் வீட்டில் நஞ்சப்பன் என்ற வேலைக்காரன் இருந்தான். அவன் அவ்வீட்டில் எல்லோருடைய எல்லாவேலைகளையும் செய்து வந்தான். ஒரு நாள் அவ்வீட்டைப் பெருக்கும் போது கீழே ஒருவெள்ளிக் காசு கிடப்பதைக் கண்டான். அவன் அதை எடுத்துக் கொண்டு போய் பொன்னம்பலத்திடம் கொடுத்து அது கீழேகிடந்தது என்றான்.

அவரும் அவனது நாணயத்தைப்பாராட்டி 'சரி, நீயே அதைவைத்துக்கொள்' என்றார். சில நாட்களாயின, ஒருநாள் பொன்னம்பலத்தின் மகள் தன் வைரமாலையைக் காணவில்லை என்று தன் தந்தையிடம் கூறினாள்.

அவர் வீட்டிலுள்ள எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்தார் அதுகிடைக்கவில்லை.

அதன்பிறகு அவர் எல்லா வேலைக்காரர்களிடமும்விசாரித்தார், அவர் நஞ்சப்பனிடம் விசாரித்த போது, அவன் 'அந்த மாலை இரண்டு நாட்களுக்கு முன் எனக்கு கிடைத்தது' என்றான். அதுகேட்டுப் பொன்னம்பலம் 'அப்படியானால் ஏன் அன்றே என்னிடம் கொண்டுவந்து கொடுக்கவில்லை?' என்று கடுமையாகக் கேட்டார்.

நஞ்சப்பனும் 'அன்று ஒரு வெள்ளிக் காசு கிடைத்த போது அதை உங்களிடம் கொடுத்தேன், நீங்கள் அப்போது அந்த நாணயத்தை எனக்கே கொடுத்து விட்டீர்கள். நான் இந்த மாலையை உங்களிடம் கொடுத்தாலும் என்னையே எடுத்துக் கொள்ளச் சொல்வீர்கள் என்று நினைத்து, அதை நானே வைத்துக் கொண்டேன் என்றான்.

அதைக்கேட்ட பொன்னம்பலம், நாணயத்தை எடுத்துக் கொடுத்ததிற்காய் தான் அவனுக்கு இடம் கொடுத்து அவனது நாணயத்தைப்பாராட்டியதும், இடம் விட்டுக் கொடுத்ததும் எவ்வளவு தீங்காகிப் போனதே என கற்சிலையாகி நின்றார்.

நன்றி

—பாப்பாமுரசு—

## தமிழ் மக்களின் இன்றைய தேவை இனப்பிரச்சினைக்கான தீர்வே

### த.வி.கூ பிரமுகர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் இன்றைய தேவை யுத்த நிறுத்தமும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதுமேயாகும். இப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசாங்கம் முற்படுமேயாயின் அதற்கு எமது பூரண ஆதரவு எப்பொழுதுமே உண்டு என தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வி. ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; இனப்பிரச்சினைதீர்வுவிடயத்தில் காலங்காலமாக இழுத்தடிப்புகளும்முன்னுக்குப் பின் முரணான போக்குமே காணப்பட்டு வந்தன.

1959 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இந் நடைமுறையே பின்பற்றப்படுகிறது.

உருப்படியான நீதியான, தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய எந்த ஒரு திட்டத்திற்கும் நாம் முழுமையாக ஆதரவு வழங்க தயங்கமாட்டோம்.

இதேவேளையில் ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கும் எந்த ஒரு நடவடிக்கைக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணி துணைபோகாது என்றார். (க)

## இளைஞரின் சடலம் மீட்பு

(கொழும்பு)

கந்தானை மெற்றிக்கம பகுதியில் இளைஞர் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலைமீட்கப்பட்ட மேற்படி சடலத்தில்வெட்டிக் கொலை செய்ததிற்கான அடையாளங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மரணவிசாரணையின் பின் இச் சடலம்ராகமவைத்தியசாலையில் பொலிஸாரால்ஒப்படைக்கப்படவுள்ளது,

இது தொடர்பானமேலதிக விசாரணைகளை கந்தானை பொலிஸ் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர் என பொலிஸ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த)

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவி பிரதமருக்கு வழங்கப்படும்

(கொழும்பு)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியை அனுருத்தரத்வத்தையிடம் ஒப்படைக்க வேண்டாமென முஸ்லிம்காங்கிரஸ்இணைத் தலைவர்ரவூப் ஹக்கீம் ஜனாதிபதியிடம் வலியுறுத்திவருவதாகத் தெரியவருகிறது.

தேர்தல் காலங்களின்போது கண்டியில் இடம்பெற்ற வன்செயல்களுக்கு ரத்வத்தையின் மகனே காரணமெனக்கருதப்படுவதனாலேயே பிரதிப்பாதுகாப்பு அமைச்சை அனுருத்த ரத்வத்தையிடம்கொடுக்க வேண்டாமெனக் கோரப்பட்டுள்ளது.

இதேவேளைஇக்கோரிக்கைக்கு ஜனாதிதி இணங்கும் பட்சத்தில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவியை பிரதமர் இரட்ணசிறிவிக்கிரமநாயக்காவிடம் ஒப்படைக்கப்படுமென அரச வட்டாரங்கள் ஊகம் வெளியிடப்பட்டுள்ளது. (ந)

## ஈழத்து எழுத்தாளர்களின் தமிழ் நூல் கண்காட்சி விரைவில் லண்டன் மாநகரில்

(தென்மராட்சி)

ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் நோக்குடன் லண்டன் மாநகரில் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் நூல் கண்காட்சி ஒன்றினை நடத்துவதற்கான விரிவான ஏற்பாடுகள் தமிழ் ஆர்வலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நூல் கண்காட்சியில் தமது ஆக்கங்களை உள்ளடக்கவிரும்பும் குடாநாட்டுப் படைப்பாளிகள்எம்.கே. ஜீவகதாஸ்,மே.பா.வீ.ஜீ. தங்கவேல், புலோலி தெற்கு, புலோலி.எனும்முகவரியுடன் தொடர்பு கொண்டுமேலதிக விபரங்களைப் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-77)

## இலவச மூக்குக்கண்ணாடிகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு கொக்குவில் பொற்பதி வீதியில் உள்ள 68 இலக்க இல்லத்தில் வைத்து எதிர்வரும் 22 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற உள்ளது.

ஆனைக்கோட்டை உயரப்புலம் றோமன் கத்தோலிக்க பாடசாலை, காந்திஜீநிறை வாழ்வகம் ஆகிய வற்றில் ஏற்கனவே கண்பரிசோதனை மேற்கொண்டவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே இவ் இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட உள்ளன.

.லயன்ஸ் கழக வலயம் 09

## கண்டி மாவட்ட தேர்தல் முடிவுகள் ஊடகத்துறையினருக்கு அறிவிக்கவில்லை

(கண்டி)

கண்டி மாவட்டத் தேர்தல் முடிவுகள், ஊடகத்துறையினர்க்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லையென குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தின் பல தொகுதிகளிலும் வன்செயல்கள் இடம் பெற்றதன் பேரில் அம்மாவட்டத் தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் தமாதம் ஏற்பட்டமைதெரிந்ததே.

தாமதமாக முடிவுகள் வெளியிடப்பட்ட போதிலும், கண்டி தெரிவத்தாட்சி அலுவலர் உள்ளூர் ஊடகவியலாளருக்கு அதனை அறிவிப்பதில் அக்கறை காட்டவில்லையெனவும், இதனால் ஊடகவியலாளர்கள் பெருஞ் சிரமங்களிற்கு ஆளாகியதாகவும் அக்குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## 3 வர்த்தக பிரமுகர்கள் பொலிஸாரால் கைதாகினர்

### மிருகாமப் பகுதியில் சம்பவம்

(கொழும்பு)

மிருகாமப் பகுதியில் ஒருவரைக்கடத்திச் சென்றதான சந்தேகத்தின் பேரில் மூன்று வர்த்தகர்களை இப்பகுதி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி வர்த்தகர்கள் பாடு கிடைத்ததினையடுத்தே குற்றப்புலனாய்வுப் பிரிவினால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ்வர்த்தகர்கள் தடுப்புக் காவலிலுள்ளதாகவும், இவர்கள் மீதான விசாரணைகள் தொடர்ந்து நடத்தப்படுவ

## இரண்டு வருடங்களாக திறக்கப்படாத சனசமூக நிலையம்

(கொழும்பு)

மஸ்கெலியாவில் இரண்டு லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சனசமூக நிலையம் இரு வருடங்களாகியும் திறந்து வைக்கப்படவில்லை என புகார் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி நிதியத்திலிருந்து ஒரு லட்சம் ரூபாவும் அம்பகமுவா பிரதேச சபையில் இருந்து ஒரு லட்சம் ரூபாவும் மேற்படி சனசமூக நிர்மாணத்திற்கு செலவிடப்

சுவர்களில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை அகற்றும்பணி தற்போது ஆரம்பித்துள்ளதாகவும் வெகுவிரைவில் இச் சனசமூக நிலையம் பணியாற்றும் எனவும் கூறினார்.

இச் சனசமூக நிலையத்தில் ஆயுள் வேத வைத்தியசாலையொன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

நேற்றைய வலம்புரியில் 7ம்பக்கத்தில்

ரைக்கடத்திச் சென்றதான சந்தேகத்தின் பேரில் மூன்று வர்த்தகர்களை இப்பகுதி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி வர்த்தகர்கள் பிரஸ்தாப நபரிடமிருந்து 10 லட்சம் ரூபாய் கடனை அறவிடுவதன் பொருட்டு கடத்தியுள்ளார்கள் என்ற முறைப்

னால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ்வர்த்தகர்கள் தடுப்புக் காவலிலுள்ளதாகவும், இவர்கள் மீதான விசாரணைகள் தொடர்ந்து நடத்தப்படுவதாகவும், குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி டி.எஸ்.தனநாயக்க தெரிவித்துள்ளார்.

(த)

# மானிப்பாயில் இடம் பெற்ற சர்வதேச வெள்ளை பிரம்பு தினம்

## ஆறுலயன்ஸ்கழகங்கள்பங்கு பற்றின

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சாவகச்சேரி, கொக்குவில், சுன்னாகம், இணுவில், மானிப்பாய்வட்டம், நல்லூர் ஆகிய ஆறு லயன்ஸ் கழகங்கள் ஒன்றிணைந்து மானிப்பாயிலுள்ள வாழ்வகம் நிறுவனத்தில்சர்வதேச வெள்ளை பிரம்பு தினத்தினை நேற்று முன்தினம் அனுஷ்டித்தனர்.

இக்கழகங்களின் சார்பாக வாழ்வகத்திற்கு ஆறுபிளாஸ்ரிக் கதிரைகளும், ஐந்துவெள்ளைப் பிரம்புகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இந் நிகழ்ச்சியில் கண்பார்வைத்திட்டத்துக்கானமாவட்டத் தலைவர் லயன். பி. தவபாலன் பிரதம விருந்தினராகவும், வலயத் தலைவர்களான லயன். எஸ். சற்குணராஜா லயன். பொ. கமலநாதன் ஆகியோர்சிறப்புவிருந்தினர்களாகப்பங்குபற்றியிருந்தனர்.

மானிப்பாய் வட்டத்தைச் சேர்ந்த கண்பார்வை செயல்திட்டத் தலைவர் லயன். எஸ். எஸ் தங்கராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில், கண்பார்வை இழந்தவர்களின் சங்கத்தினைச் சேர்ந்த உறுப்பினர்களும் பங்கு பற்றியிருந்தனர்.

வாழ்வகத்தின் தலைவி செல்வி. எஸ். சின்னத்தம்பி லயன்ஸ் கழகங்களுக்கு நெதர்லாந்தில்இருந்து வந்த ஒருதொகைமூக்குக் கண்ணாடிகளை அன்பளிப்புச் செய்திருந்தார் என்பதுகுறிப்பிடத்தக்கதாகும்.

இணுவில் லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன். ஆர். தேவராஜா நன்றியுரை வழங்னார்.

(க-77)

மேற்கொண்டவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே இவ் இலவசமூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

லயன்ஸ் கழக வலயம் 09 இன்தலைவர் லயன் பொ. கமலநாதனின் வருகையை ஒட்டியே இவ்ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்ட லயன்ஸ் கழக பிரமுகர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொள்ள இருப்பது குறிப்பிடத்தக்கது.

(க)

ஜனாதிபதி நிதியத்திலிருந்து ஒரு லட்சம் ரூபாவும் அம்பகமுவா பிரதேச சபையில் இருந்து ஒரு லட்சம் ரூபாவும் மேற்படி சனசமூக நிர்மாணத்திற்கு செலவிடப்பட்டது.

இச்சனசமூக நிலைய திறப்பு விழா பற்றி அம்பகமுவா பிரதேச தலைவர் எம். ரவீந்திரன் கூறியபோது தவிர்க்க முடியாத காரணங்களால்அது இன்னும் திறக்கப்படவில்லையெனவும், தேர்தல் காலத்தின் போது இச்

யொன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த)

நேற்றைய வலம்புரியில் 7 ம்பக்கத்தில் 'இடம்பெயர்வோரின் மன அவலங்களை நோக்கி அன்புக்கரம் நீட்ட வேண்டியது அவசியமே' என்னும் தலைப்பில் பிரசுரமாகிய கட்டுரை சி.ஜெய கணேஷன் என்பவருடைய ஆக்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்..(ஆ-ர்)

# தொங்குபாராளுமன்றம் அமைவதால் சமாதானமுயற்சிகள்பின்தள்ளப்படும்

## மேற்குலக இராஜதந்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

தொங்கு பாராளுமன்றம் அமைவதால், சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காண்பதற்கான வாய்ப்பு மிக அரிதாகவே உள்ளது.

யுத்தத்தினால் சீரழிந்து போயுள்ள ஒரு நாட்டில் சமாதான முயற்சிகள் வழுக்கியே செல்லும் என மேற்கத்தைய இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மிகவும் சிறியளவிலான பெரும்பான்மையுடன் பொது ஜனஐக்கிய முன்னணிவெற்றி பெற்றுள்ளது. இதனால் தொங்கு பாராளுமன்றம் உருவாகும் நிலையேற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சி வெற்றி பெற்றால், இனப்பிரச்சினைக்கு உடனடித்தீர்வு காணப்படுமென தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்தகாலங்களில்கூட இலங்கையில் எந்த ஒரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறாத சந்தர்ப்பத்தில் தொங்கு பாலம் அமைக்கப்பட்டு வந்தமையும், இனப்பிரச்சினை தீர்வில் கருத்து ஒற்றுமை ஏற்படாதிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(கு-உ)

### சவூதியிலிருந்து லண்டன் புறப்பட்டபோது

# கடத்தப்பட்ட விமானம்

# எவ்வேளையிலும்வெடித்துசிதறலாம்

## மீட்கப்படாத நிலையில் வெடிகுண்டுகள்

(லண்டன்)

நேற்று முன்தினம், சவூதி விமான நிலையத்தில் இருந்து லண்டன் புறப்பட்ட சமயம் கடத்தப்பட்ட விமானம் மீட்கப்பட்ட போதிலும் அது எந்நேரமும் வெடித்துச் சிதறலாம் என்றும் அச்சம் பரவலாக நிலவுகிறது.

சவூதி அரசின்எதிர்ப்பாளர்கள் அந்நாட்டில்இருந்து, 111 பேருடன் லண்டன் நோக்கிப் புறப்பட்ட போயிங்777ரக விமானத்தினை நடுவானில் கடத்தி, ஈராக் தலைநகர் பக்தாத்தில் தரையிறக்கினர்.

இதனையடுத்து கடத்தல்காரர் கைது செய்யப்பட்டதுடன், பயணிகளும் மீட்கப்பட்டனர்.

கடத்தல்காரர்களின் வாக்கு மூலத்தின்படி, மீட்கப்பட்ட விமானத்தில் வெடி குண்டு வைக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது.

இருப்பினும் விமானத்துள் வைக்கப்பட்டிருக்கும் வெடி குண்டினை மீட்கமுடியா நிலை ஏற்பட்டுள்ளதாலேயே அதுஎந்நேரமும் வெடித்துச் சிதறலாம் என அஞ்சப்படுகிறது.

இதேவேளை, கடத்தப்பட்ட விமானத்தில் இருந்து மீட்கப்பட்ட பயணியருள் ஒருவர் இந்தியர் என தெரிய வந்துள்ளது. (க-உ)

## ஈரான்-ஈராக் உறவில் புதிய திருப்பம் ஆரம்பம்

[பக்தாத்]

இரு நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம், என்று ஈராக் நாட்டின் அதிபர் சதாம் ஹுசைன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஈராக் சென்றடைந்த ஈரான் வெளியுறவு அமைச்சர் கமல் கறேசியை வரவேற்று உரையாடுகையில் தெரிவித்தார்.

ஈரானும் ஈராக்கும் மீண்டும் நட்புறவுடன் தங்களுக்குள் உள்ள பிரச்சினைகளை சுமுகமான முறையில் தீர்த்துக் கொள்ள நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாக இரு நாட்டினரும் கருதுகிறார்கள். (து)

## உலக தரிசனம்

### அ.இ.அ.தி.மு.க. பொதுக்கூட்டம்

(புதுடில்லி)

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக பொதுக்குழுக் கூட்டம் இம்மாதம் 24 ஆம் திகதி கழக அவைத்தலைவர் காளி முத்து தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக செயலர் செல்வி ஜெயலலிதா தலைமையில் கடந்த 10ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

இருப்பினும் செல்வி ஜெயலலிதாவுக்கு ரான்சி நிலபேர ஊழல் வழக்கில் 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையை சென்னை உயர் நீதிமன்றம் வழங்கியதை அடுத்து இம் மாற்றம் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## மகாத்மா காந்தியால் உருவாக்கப்பட்ட பத்திரிகை மீண்டும் வெளிவருகிறது

(டர்பன்)

'இந்திய கண்ணோட்டம்' என்ற பத்திரிகை மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ளது.

தென்னாபிரிக்க நகரான டர்பனில் மகாத்மா காந்தியால் 1903 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகை தடைப்பட்டிருந்தது தெரிந்ததே.

இப்பத்திரிகையை தென்னாபிரிக்கதுணை அதிபர் ஜெக்கப் தூமா வெளியிட்டார்.

அகிம்சை, சத்தியம் மற்றும் அந்நிய ஆதிக்கத்தின் கொடுமைகளையும் எடுத்துக் கூற தொடங்கப்பட்டதே இப்பத்திரிகை.

இப்பொழுது அதேபேரில் தொடங்கப்பட்ட இப்பத்திரிகை தென்னாபிரிக்க சமகால போக்குகளை மேம்படுத்துவதாக அமைந்திருக்குமென்று தென்னாபிரிக்க உப அதிபர் தெரிவித்தார். (து)

## வியட்நாமில் தொடரும் அடை மழை 500ற்கும் மேற்பட்டோர் பலி

(பர்மா)

வியட்நாமில் தொடரும் அடைமழையால், பலநூறு மக்கள் பலியாகியுள்ளதுடன், மழை வெள்ளத்தினால் ஏற்பட்ட சேறு சகதிக்குள் அகப்பட்ட பலர் மீண்டுவர முடியாது துன்பப்படுவதாக தெரியவந்துள்ளது.

ஈடுபட்டு வருகின்ற போதிலும், பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைவதில் பலத்த சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியிருப்பதாக ஈவம்கூறப்படுகிறது.

இம்மாத முற்பகுதியில், வடக்கு வியட்நாமில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு

### கர்நாடகத்துக்கு உலகவங்கி உதவும்

(பெங்களூர்)

கர்நாடக மாநில வளர்ச்சிக்கு உதவுவதற்கு உலகவங்கி முன்வந்துள்ளது.

பெங்களூரில் முதலமைச்சர்

## ஹரியானா முதலமைச்சர் ஓம்பிரகாஷ் தென் கொரியாவிடம் அவசர கோரிக்கை

(சோல்)

ஹரியானா மாநில நெடுஞ்சாலைகள் அமைக்கவும் பாலங்கள் அமைக்கவும் தென் கொரியா உதவ முன்வர வேண்டும். என்று அம் மாநில முதல்வர் ஓம்பிரகாஷ் சௌடாலா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தென் கொரிய சோல் நகருக்குச் சென்றிருக்கும் ஓம்பிரகாஷ் அங்குள்ள கம்பனிகளிடம் வீதிச் சீர்திருந்த ஒப்பந்தங்களைச் செய்ய முன்வருமாறு அழைப்பு விடுத்தார். (து)

## மாற்றுக்கை பொருத்தும் முயற்சி மலேசியாவில் வெற்றியாம்

(கோலாலம்பூர்)

மலேசியாவில் கையிலாக் குழந்தையொன்றுக்கு மாற்றுக்கை பொருத்தும் முயற்சியில் மலேசியா வைத்திய குழுவினர் வெற்றிகண்டுள்ளனர்.

இக் குழந்தை இரட்டைக் குழந்தையாகபிறந்ததாகவும் பிறந்த போதேகையில்லாமல் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

மேற்படி குழந்தையோடு கூடப்பிறந்த குழந்தை சிலமாதங்களிற்குமுன்மூளைக்காய்ச்சலினால்பாதிக்கப்பட்டுஇறந்ததாகவும், அக்குழந்தையின் கையே மேற்படிகுழந்தைக்கு பொருத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது. (க-த)

## முஸ்லிம்களைக் கவரும் பேச்சு

(மும்பை)

முஸ்லிம்களை ஈர்க்கும் கருத்துக்களை அடிக்கடி மேடைகளிலும் மகாநாடுகளிலும் பேசிவரும் பங்காரு லஷ்மணை சிவசேனா தலைவர் சாடியுள்ளார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் முஸ்லிம்களை பாரதிய ஜனதாக் கட்சியில் சேரும்படி அழைப்பது, சிறுபான்மையினரை மகிழ்விக்கும் ஒரு வேலையென்று சிவசேனா தலைவர் பால்தாக்கர் பேசினார்.

## தேர்தல் வன்முறையில் ஈடுபட்டோரை பிணையில் செல்வதற்குநீதவான் அனுமதி

(கொழும்பு)

பதுளைமற்றும்மாத்தறைப் பகுதிகளில் தேர்தல் வன்முறைகளில்ஈடுபட்ட 18பேரையும் பிணையில் செல்வதற்கு பதுளை நீதிமன்றதில் நீதவான் ஒப்பாரிகுணசேகர. அனுமதித்துள்ளார்.

18பேரையும் 3குழுக்களாக பிரித்து, ஒருகுழுவிற்கு தலா 25ஆயிரம் ரூபாசரீரப்பிணையில் செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை றுகுண பொலிஸ் அதிகாரி றோசன் பிரிஸ் தலைமையிலான பொலிஸ் குழு இச்சம்பவம் தொடர்பாக மேலும் விசாரணைகளை தொடர்ந்து நடத்திவருகின்றது. (ஜ)

## ஒரே கட்சியைச் சேர்ந்தோர் மோதியதில் இருவர் படுகாயம்

### ஓட்டமாவடியில் சம்பவம்

மட்டக்களப்புஓட்டமாவடியில் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் பிரிந்து மோதியதில் இருவர் படுகாயங்களுக்குள்ளாகினர். பெறுமதி வாய்ந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் இச்சம்பவத்தில் தீக்கிரையாக்கப்பட்டது.

தேசிய ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களிடையே ஏற்பட்டவாய்த்தர்க்கம்கை கலப்பாக மாறியதிலேயே மேற்கண்ட விபரீதம் இடம்பெற்தாக தெரிய வந்துள்ளது.

இதேசமயம்,

ஓட்டமாவடியில் தேர்தல்

செய்யப்பட்டுள்ளனர்.

காயமடைந்தோர் உடனடியாக மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### முதியோர் தினம்

பச்சிலைப்பள்ளி பளை பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் முதியோர்தின விழா, எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணியளவில்கரணவாய்மூத்த விநாயகர் ஆலயத்திற்கு அருகில் உள்ள விவசாயிகள்

[illegible]
மக்கள் பலியாகியுள்ளதுடன், மழை வெள்ளத்தினால் ஏற்பட்ட சேறு சகதிக்குள் அகப்பட்ட பலர் மீண்டுவர முடியாது துன்பப்படுவதாக தெரியவந்துள்ளது.

வியட்நாமின் மத்திய மற்றும் தெற்குப் பகுதியில் பல நாட்களாக தொடரும் பலத்த மழையால் 500 இற்கும் மேற்பட்டோர் பலியாகியிருக்கலாம் என கருதப்படுவதுடன், பலர் காணாமல் போயிருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவு, குடிநீர் என்பவற்றை வழங்குவதில் மீட்புப்பணியாளர்கள் தீவிரமாக [illegible] பலத்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாக சுவம்கூறப்படுகிறது.

இம்மாத முற்பகுதியில், வுடக்கு வியட்நாமில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பெருந்தொகையான மக்கள் பலியானமை தெரிந்ததே (உ)

## இஸ்ரேல் இராணுவ அதிகாரி கைது

(ஜெருசலம்)

இஸ்ரேல் இராணுவ அதிகாரி ஒருவரை பாலஸ்தீனஹில் அமைப்பினர் சிறைப் பிடித்து வைத்துள்ளனர். [து]

## [illegible] உதவும்

(பெங்களூர்)

கர்நாடக மாநில வளர்ச்சிக்கு உதவுவதற்கு உலகவங்கி முன்வந்துள்ளது.

பெங்களூரில் முதலமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இதனைத் தெரிவித்தார்.

பெங்களூரின் ஆக்கத் தொழிற்பாடான மின்சாரத் துறைக்காக 6200 கோடி ரூபா வழங்க முன்வந்துள்ளது.

இந்த உதவி 4 ஆண்டுகளுக்குள் படிப்படியாகக் வழங்கப்படும் என்று உலக வங்கி தெரிவித்திருப்பதாக முதலமைச்சர் கிருஷ்ணா தெரிவித்தார். (து)

[illegible] பாக மாறியதிலேயே மேற்கண்ட விபரீதம் இடம்பெற்றதாக தெரிய வந்துள்ளது.

இதேசமயம்,

ஓட்டமாவடியில் தேர்தல் கடமையில் ஈடுபட்ட ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர் சிலரது வீடுகள் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகசந்தேகத்தின் பேரில் இருவர் கைது

[illegible] எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணியளவில்கரணவாய்மூத்த விநாயகர் ஆலயத்திற்கு அருகில் உள்ள விவசாயிகள் இளைப்பாற்று மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண கமநலசேவை உதவி ஆணையாளர் கே.சுந்தரேசன் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (உ)

### பீஹார் மாநிலத்தில் தொடரும்

# படுகொலைகளை நிறுத்தாத அரசை பதவிநீக்க கோரிக்கை

(புதுடில்லி)

பீஹார் மாநிலத்தில்தொடரும் படுகொலைகளைத் தடுக்க முடியாத அம் மாநில அரசு, நீக்கம் செய்யப்பட வேண்டும் என மத்திய அமைச்சர் ராம் ஜெலாத் பட்வான் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை, நாலாந்தா எனுமிடத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த 11 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

அதற்கு அடுத்தநாள் இதே இடத்தில் 5 பொதுமக்கள் கோரமான முறையில் கொல்லப்பட்டனர்.

சமூக விரோத கும்பல்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வாறான திட்டமிட்ட படுகொலைகளைத் தடுக்கமுடியாத அரசு உடன் நீக்கப்படவேண்டும்.

இல்லையேல் இவ்வாறான கொலைகள் இன்னமும் தொடரும் எனவும்அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேசமயம்,

மேற்படி கொலைச்சம்பவங்களுடன் தொடர்புடைய 8 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது. (உ)

# சங்கே முழங்கு

## இனியாவது முயற்சிப்பார்களா?

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ். கிளையில் ஆயுள் காப்புறுதி செய்து, ,காலம் முதிர்ச்சியடைந்தும், பல மாதங்களாக பணத்தைப் பெற முடியாமல் தினமும் பலர் அக் கிளைக்குச் சென்று அலைகிறார்கள்.

இருபது வருடங்களாக மாதா மாதம் ஒழுங்காகப் பணம் செலுத்தியும் தமது பணத்தை மீளப் பெற இயலாமல் உள்ளது.

இது விடயமாக வடபகுதி முகாமையாளரிடம் விசாரித்த போது தமக்கு கொழும்பிலிருந்து நிதி வந்தால் மட்டும் கொடுப்பனவு செய்ய முடியும் எனக் கூறுகிறார்கள்.

ஏழை மக்கள் தமது எதிர்காலத் தேவைக்குச்செலுத்திய பணத்தைக் காலம் தாழ்த்தாதுவழங்கஇலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளை இனி மேலாவது முயற்சி எடுக்க வேண்டும்.

**ஆ சி கணேசவேல்**
உயரப்புலம் ஆனைக்கோட்டை.

''ஆக்கம் கருதி முதல்
இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடையார்''

குறள்

## வலம்புரி

### ஆரோக்கியமற்ற அரசாங்கம்

பதினோராவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு நாளை 18 ஆம் திகதி கூடவுள்ளது. தேசியப் பட்டியல் மூலமான எம்பிக்களைக் கூட யாரெனத் தெரியாத நிலையிலும், அமைச்சரவைப் பொறுப்புக்கள் கையளிக்கப்படாத நிலையிலும் பாராளுமன்றம் கூடவுள்ளது.

அதே சமயம் ஆட்சி அமைக்கும் வாய்ப்பு இன்னமும் தங்களுக்கு உண்டென்ற அவாவில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஓயாது ஓடித்திரிகிறது. நாளை பாராளுமன்றம் கூட உள்ள போதிலும் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையை எப்படியாவது திரட்டிக்கொள்ள முடியுமென்ற முயற்சிகளில் ஐக்கிய தேசியக் கட்சி இறங்கியிருக்கிறதெனின் அமையப் போகும் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆரோக்கியம் எத்தகையதென்பதைப் புரிந்து கொள்வதில் பெரும் சிக்கல்கள் ஏற்படாது.

ஆரோக்கியமாகஇருந்த போது தமிழ் மக்களுக்கு எதனையும் வழங்க முடியாத அரசாங்கத்தினால் ஆவி அகத்தோ புறத்தோ என்ற நிலையில்இருக்கும் போது எதனையும்வழங்க முடியாதுஎன்பதுதெளிவு,

ஆட்சியமைப்பதற்கு ஒவ்வொரு கட்சிகளும் நிபந்தனைகளை விதித்து அரசாங்கத்தை அங்குமிங்குமாக ஆட்டிப்படைக்

# மன அழுத்தங்களின் வெளிப்பாடே கனவுநிலை

## அறிவியலாளரின் உரைசான்றுபகிர்கின்றது

கனவு காண்பது என்பது பல்வேறு தரப்பினர் மத்தியிலும் காணப்படும் ஒருவகை நோயாக மருத்துவர்களினால் கொள்ளப்பட்டு வருகின்ற இவ்வேளையில் இதுபற்றிய ஆய்வு இன்றியமையாத ஒன்றாகும்.

இன்று தொடரும் மனிதமன அவலங்கள், துன்ப, துயரங்கள் போன்றவற்றின் ஒருவகை வெளிப்பாடாகவும் கனவு காணுதல் அமைகிறது.

கனவு காண்பவர் உளநிலை, அவர்சார்ந்த துறை என்பன கனவின் முக்கிய நிகழ்வுகளாக அமைகின்றன.

அவ் வகையில் கனவு காண்பது தொடர்பான விடயங்கள் கேள்வி - பதில் ரீதியாக இங்கு தரப்படுகிறது.

● உடல் மற்றும் மன நலனில் கனவுகள் எவ்வளவு முக்கிய பங்காற்றுகின்றன?

உறக்கத்தில் கனவு காணும் நிலையான விழி விரைவு இயக்க கட்டம் உடலின் ஆற்றலை மீட்டளிப்பதற்கு மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. கனவு காணும் நிலை, மைய நரம்பு மண்டலத்தின் இயக்கத்திற்கு இன்றியமையாததாக உள்ளது. நினைவுகூர்தல், மன ஒருங்கிணைப்பு அ.தாவது, பழைய விஷயங்களுடன் புதியதை இணைத்துக்கொள்ளுதல்-போன்றவற்றிற்குக் கனவு காண்பது உதவுகின்றது என்று சிற்சில ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

கண்ட கனவை நினைவு வைத்திருப்பதைவிட கனவு காண்பது தான் சிறப்பு பெறுகிறது. கண்ட கனவை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வருவது உங்களைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள உதவலாம். அல்லது நீங்கள் மறந்துபோன விஷயங்களை நினைப்பூட்டலாம். கனவுகள் நமது ஆழ்ந்த உணர்வுகள், விருப்பங்கள், அச்சங்கள் போன்றவற்றை அறியவும் உதவலாம்.

● கனவுகள் ஒருவரது உண்மை மனப்பாங்கை மூடிமறைக்காமல் காட்டக்கூடுமா?

அப்படிச் சொல்ல முடியாது. கனவுகள் ஏராளமானவற்றை வெளிப்படுத்தக் கூடும்; ஆனால், அவை நீங்கள் உண்மையில் எப்படிப் பட்டவர் என்பது பற்றி ஒரு

கனவுகள் நாம் மேலும் நினைவில் வைக்கத் தேவையில்லாதவற்றை மூளையிலிருந்து அகற்றிச் சுத்தப்படுத்துகிற செயலே என்றார்கள். இதை அப்படியே ஒப்புக் கொள்ள முடியாது; என்றாலும், இந்த அறிவியலறிஞர்கள் பின்னோக்கிக் கற்றலைக்

லாத மற்றவர்களை விட அப்படி ஒன்றும் ஆரோக்கியமானவர்கள் என்று சொல்ல முடியாது. அது வெறும் தப்பெண்ணமாகவும் இருக்கலாம்.

● கனவு நிலையின் மீது நாம் எந்தளவுக்கு கட்டுப்பாடு செலுத்துகிறவர்களாக இருக்கிறோம்? ஒரு நபர் கனவுகளை இப்படி இப்படிக் காணவேண்டும் என்று முன் கூட்டியே நிரல்படுத்தக் கூடுமா?

நீங்கள் காணும்கனவின் மீது ஓரளவு ஆதிக்கம் செலுத்தமுடியும் என்பது உண்மையே. படுக்கைக்குப் போகு முன்னர் செய்கிற செயல்கள் அல்லது பகல்பொழுதில் செய்தவை ஆகியவற்றுடன் கனவுகளுக்கும் சிறிது தொடர்பு உண்டு. ஒரு பிரஞ்சுக்காரன் தூங்கும்போது தனது வேலைக்காரனை வாசனைப் பொருளைத் தூங்கும் அறைக்குக் கொண்டுவரும்படி சொல்வானாம். அப்படி வேலைக்காரன் வாசனைப் பொருளைக் கொண்டுவரும்போது,

னர்என்பது ஆய்வில் கண்ட உண்மை. இதில் விளங்கும் இன்னொரு உண்மை-பயங்கரக் கனவுகளை அடிக்கடி காண்பவர்கள் கலைத்திறம் மிக்கவர்களாகவும் ஆக்கப் பணிகளில் சிறந்தவர்களாகவும் இருக்கின்றனர் என்பதாகும்.

● பிறரால் துரத்தப்படுதல் தேர்வுகளில் தோல்வியடைதல், சில சமயம் அரைகுறை ஆடைகளுடன் காணப்படுதல் போன்ற காட்சிகள் பயங்கரக் கனவுகளில் வருகின்றன அல்லவா? இவை எதை அடையாளப்படுத்துகின்றன?

இதுபற்றிப் பொதுவாகத் தான் குறிப்பிட முடியும் ஏனெனில், இப்படிப்பட்ட காட்சிகள் வெவ்வேறுபட்டவர்களுக்கு வெவ்வேறு பொருள் உள்ளவையாக இருப்பதுண்டு. இருந்தாலும் பிறரால் அல்லது எதுவோ ஒன்றால் துரத்தப்படுவது போன்ற கனவுகள்தான் மிகச் சாதராணமாகத் தோன்றும் பயங்கரக் கனவுகளாகும்.

நன்றி - நல்வழி
(அடுத்த வாரம் தொடரும்)

## மருத்துவ விளக்கம்

கனவு காணலின் முதல் செயற்பாடாகக் காண்கின்றனர்.

மூளையின் மேலுறையில் மோனோமைன்ஸ் எனப்படும் ஒரு வகை வேதிப்பொருள்கள் என்னவிளைவை உண்டுபண்ணுகின்றன என்பது தான் தற்போது நடைபெற்று வரும் கனவு தொடர்பான மிக முக்கியமான உயிரியல் ஆய்வாக உள்ளது. எனலாம். இந்த ஆய்வுகள், உறக்க-விழிப்பைப் பற்றி மட்டுமல்ல, மன செயல்பாடுகள் மற்றும் மனநலக்கேடுகள் போன்றவற்றைப் பற்றியும் இன்னும் அதிகமாக அறிந்து கொள்ளத் துணைபுரியும்.

● சிலர் தாம் கண்ட கனவுகளை அப்படியே நினைவில் வைத்துள்ளனர்; ஆனால், மற்றவர்கள் அப்படி இல்லையே ஏன்?

கனவுகளை அப்படியே நினைவு வைத்திருப்பது பல காரணிகளைச் சார்ந்துள்ளது. உறக்கம் எவ்வளவு

தூங்குபவனுக்கு இனிய கனவுகள் தோன்றுமாம்.

பகலில் ரோஜா் நிறக் கண்ணாடிகளை அணிந்தால் கனவுகள் சிவந்தநிறத்தில் அல்லது இளஞ்சிவப்பு நிறத்தில் தோன்றும் என்று ஓர் ஆராய்ச்சி காட்டியுள்ளது. அதைப்போலவே, விழித்திருக்கும்போது உள்ள மனப்பாங்கு சிந்தனைகள் மற்றும் எண்ணவோட்டங்கள் கனவுகளை ஆதிக்கம் செலுத்துகின்றன. உறங்கும் முன்னர் நல்ல மனநிலையுடன் இருந்தால், வாழ்வில் நடைபெறும் காரியங்கள்யாவும் நல்லமுறையில் நடைபெற்றுவந்தால், இனிய கனவுகள் தோன்றுகின்றன.

சிலரால் காணுகின்ற கனவின் போக்கை மாற்றிக் கொள்ள முடிகிறது என்கிறார்கள். ஆனால், அப்படியும் செய்யமுடியுமா என்றஐயம் உண்டு. அதேபோல், வாழ்வில் குறுக்கிடும் பிரச்சினை ஒன்றைத் தீர்க்கவென்றே இப்படிக் கனவு காணவேண்

## இராசி பலன்

17.10.2000
(ஐப்பசி 1, செவ்வாய்)
சதுர்த்தி மு.ப. 10.21 வரை
ரோகினி மு.இ- 7.37 வரை
ராகுகாலம் 3.02- 4.32
சுப நேரம் 10.32- 12.02
அமிர்த சித்தம்

**மேடம்**
கௌரவக் குறை, காரியத் தாமதம், தனவிரயம், மனப் பயம்.

**இடபம்**
தெளிவான சிந்தனை, போசன சுகம், புதியபொருள் சேர்க்கை, சயன சுகம்.

**மிதுனம்**
பிரயாண அலைச்சல், தன விரயம், கோபத்தால் காரியத் தாமதம், செல்வாக்கு.

**கடகம்**
நண்பர்கள் சந்திப்பு, மன மகிழ்ச்சி, பொருள் வரவு, கீர்த்தி.

**சிங்கம்**

ஒவ்வொரு கட்சிகளும் நிபந்தனைகளை விதித்து அரசாங்கத்தை அங்குமிங்குமாகஆட்டிப்படைக்கும் சக்தியைக் கொண்டிருக்கும்போது ஆளுங்கட்சியானது தவறியும் எதிர்க்கட்சி ஆசனத்தில் விழாமல் இருப்பதைக் கவனிக்குமேயொழியதேச நலனிலோ,இனப்பிரச்சினைக்கான தீர்விலோ அக்கறை காட்டாது என்பது சர்வ உண்மை.

தப்பித் தவறி உலக அரங்கிற்கு நாடகம் நடித்துக்காட்டும் முகமாக ஏதாவது தீர்வுத்திட்டத்தை முன்வைத்தால் கூட அதே தீர்வுத்திட்டமே கொண்டுவந்த அரசை வீழ்த்துவதற்கு காரணமாக அமைந்து விடும்.

இதனால் ஆட்சி நழுவிப் போகாமல் இருப்பதிலேயே அரசு கவனம் செலுத்துமேயொழிய வேறுஎதனையும் ஆரோக்கியமாக அகச் சுத்தியுடன் பொது ஜன ஐக்கிய முன்னணி செய்யப்போவதில்லை என்பது உறுதி.

---

னவற்றை வெளிப்படுத்தக் கூடும்; ஆனால், அவை நீங்கள் உண்மையில் எப்படிப்பட்டவர் என்பது பற்றி ஒரு தெள்ளந்தெளிவான உருவத்தை தருவதில்லை. முரண்மூளை நோய் போன்ற மனநலக் கோளாறைக் கண்டறிய விரும்பினால், குறிப்பிட்ட நபரிடம் அவரது உறக்கநிலையில் 20 நிமிடக் கனவு அறிக்கையை ஆய்வதைவிட அவருடைய விழிப்பு நிலையில் அவருடன் 20 நிமிடங்கள்பேசிப் பார்ப்பது நல்லது.

- **கனவுகளைப் பற்றிய ஃபிராயிடின் கொள்கைகளுக்கும்-இப்பொருள் பற்றிய அண்மைக்கால கண்டுபிடிப்புகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் எவை?**

ஃபிராயிடைப் பொறுத்தவரை, ஒரு நபரின் சுயநினைவற்ற நிலையில், அவருக்கு நேர்வது என்ன என்றறிய, அவரது கனவுகள் ஒரு சிறந்த வழியாக உள்ளன. ஒருவருடைய கனவின் பின்னணியைத் துருவிப் பார்க்கும்போது, அவருக்கு வரும்கனவுகள் அவரது சிறுபருவத்துப் பாலியல் விருப்பங்களை அடிப்படையாகக் கொண்டவை என்று அறியலாம். என்று கொள்கை ரீதியாக வகுத்துக் கூறியுள்ளார். ஃபிராய்டு.

அண்மையில், கிரிக் மற்றும் மிட்சிசன் என்ற இரு பிரிட்டிஷ் அறிவியலறிஞர்கள், கனவுகளை அப்படியே நினைவு வைத்திருப்பது பல காரணிகளைச் சார்ந்துள்ளது. உறக்கம் எவ்வளவு ஆழ்ந்தது. கனவுகளை மறுபடியும் நினைவுக்குக் கொண்டு வருவதில் உள்ள ஆர்வம், ஆளுமைத் தன்மை ஆகியவை உள்ளிட்ட காரணிகள் உண்டு.

ஆளுமைத் தன்மையைப் பொறுத்தவரை, ஒரு பொறியியலறிஞருக்குக் கனவுகள் அதிகமாக நினைவில் நிற்பதில்லை; ஆனால் கவிஞர் ஒருவர் அதிகமாக நினைவில் வைத்திருக்கிறார். இயந்திரகதியில் உலகைக் காண்கிற நபர், கனவுகளைக் குறைவாகவே நினைவுக்குக் கொண்டு வருகிறார். விசித்திரமான எண்ணங்கள்–உணர்வுகளில் ஆர்வம்செலுத்துகிற, உற்சாகமான நபர், கனவுகளை அதிகமாக நினைவில் வைத்திருக்கிறார். பகல் கனவு காண்கிறவர்களும்–அவர்கள் இரவில் காண்கிற கனவுகளை அதிகமாக நினைவில் வைத்திருக்க முடியும்.

- **கனவுகளை நினைவுக்குக் கொண்டு வருகிறதிறமை உடையவர்கள் சிறப்புத் தன்மை பெற்றவர்களா?**

அப்படி ஒன்றும் சொல்ல முடியாது. இதற்குச் சான்றுகள் எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை. காணும் கனவுகளை அப்படியே சொல்பவர்கள் அப்படிச் சொல்

உண்டு. அதேபோல், வாழ்வில் குறுக்கிடும் பிரச்சினை ஒன்றைத் தீர்க்கவென்றே இப்படிக் கனவு காணவேண்டும் என்று நிரல்படுத்துவதும் கடினமானதாகவே இருக்கும்.

- **பயங்கரக் கனவுகள் தோன்றுவது ஏன்?**

சிறுவயதில் நேரிட்ட பயங்களை அடிப்படையாகக் கொண்டே பயங்கரக்கனவுகள் தோன்றுகின்றன. வாழ்வில் உதவியற்றவர்களாக நிற்கிறநிலையில் பல சமயங்களில் பயங்கரக் கனவுகள் தோன்றுகின்றன. பயங்கரக் கனவுகள் 3 முதல் 6 வயதுக் குழந்தைகளுக்கு சர்வசாதாரணமாகத் தோன்றுகின்றன. நன்கு வளர்ந்தபிறகும் பாதுகாப்பற்ற உணர்வுகள் தோன்றும்போது மறுபடியும் பயங்கரக் கனவுகள் வருகின்றன. இவை கடந்தகால பயங்கள், பாதுகாப்பின்மை ஆகியவற்றையே மீண்டும் நினைப்பூட்டுகின்றன.

ஒருவரது வாழ்வில் குடும்ப உறுப்பினர் ஒருவரின் இறப்பு பிரிந்துவாழுதல், மணவிலக்கு அல்லது நோய்வாய்ப்படுதல் போன்றவை சிலசமயம் பயங்கரக் கனவுகளைத் தோற்றுவிக்கக்கூடும்.

இருந்தபோதிலும், நீண்டகாலம் அடிக்கடி பயங்கரக் கனவுகளைக் காண்பவர்கள் முரண்மூளைநோய் போன்ற மனநல பாதிப்பிற்கு ஆளாகக் கூடியவர்களாக இருக்கின்ற

---

நண்பர்கள் சந்திப்பு, மன மகிழ்ச்சி, பொருள் வரவு, கீர்த்தி.

**சிங்கம்**

மற்றவர்கள் கீழ்ப்படிவர், முயற்சிகள் கைகூடும், தொழில் மேன்மை, காரிய நன்மை.

**கன்னி**

உடல் உழைப்பு, வயிற்றுக் கோளாறு, கட்டுப்படுதல்.

**துலாம்**

கடன் சுமை, எதிரிகளால் அச்சம், உடல் உபாதை, காரியத் தாமதம்.

**விருச்சிகம்**

கௌரவம், வாகன வசதி, போசன சுகம், தனவரவு, பிரயாணம்.

**தனு**

நோய் குணமடைதல், தன வரவு, முயற்சி ஜெயம், சத்துரு ஜெயம்.

**மகரம்**

குடும்பக் கவலை, பிரயாண இடைஞ்சல், தாழ்ந்த நிலை, காரியத் தாமதம்.

**கும்பம்**

நம்பிக்கைக்குறைவு, பயந்த சுபாவம், சுகக்குறைவு, நிலை மாற்றம்.

**மீனம்**

சகோதரர் உதவி, தன வரவு, காரியம் கைகூடும், சந்தோசமான நிலை.

(பழைய நேரம்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்



## ★ வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களின்
# நிவாரணப் பணிகளை அரசா?
# இராணுவமா? கண்காணிப்பது!

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் பணிபுரியும் சகல வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்களும் அவர்களது செயற்பாட்டறிக்கையை இம்மாதம் 20ம் திகதிக்குள் தனக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று கோரும் கடிதமொன்றினை திருகோணமலை மாவட்ட இணைப்பதிகாரி மேஜர் ஜெனரல் ஹெட்டி ஆராச்சி சர்வதேச தொண்டர் நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இணைப்பதிகாரிகளின் இக்கடிதம் சர்வதேச தொண்டர் நிறுவனங்களுக்கு ஆச்சரியத்தையும் அச்சத்தையும் அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசின் அனுமதியுடன் நிவாரணப்பணிகளை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நாம் செய்து வருகிறோம். இணைப்பதிகாரியின் இக்கடிதம் எமக்கு ஆச்சரியத்தைத் தருவதாகவுள்ளது.

நாம் அரசிடம் அனுமதி பெற்று செயற்படுவதா? அல்லது இராணுவத்திடம் அனுமதி பெற்றுச் செயற்படுவதா? என்று கேள்வி எழுப்பிய ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத் தலைவர் கலாநிதி வெதோ இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுடன் தொடர்பு கொள்ளப் போவதாகவும் தெரிவித்துள்ளார். (வ)

## இனந்தெரியாதோரின் துப்பாக்கிப் பிரயோகத்தில்
## ஒரே குடும்பத்தில் மூவர் படுகாயம்

மிலுவாங் கொடவிலுள்ள மேல் மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் வீட்டில் மீது நேற்று இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் மேல் மாகாண சபை உறுப்பினர் ''லயன்ஸ் ஜெயசிங்க'' உட்பட அவரது குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது நேற்று மாலை, 8 பேர் கொண்ட கோஷ்டியினர் இவரது வீட்டினுள் புகுந்து தொலைபேசி இணைப்பை துண்டித்ததுடன் அங்கு இருந்தோர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்த வாறு வீட்டிலிருந்த 'உழவியந்திரம்' 'சைக்கிள்' என்பவற்றை தீயிட்டு கொழுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (4)

## அகதி அந்தஸ்து மறுப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு திருப்பிஅனுப்புவதற்காக மேலும் ஒரு தமிழர் ஜேர்மன் 'மோஷ்' சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சந்திரமோகன் (வயது23) என்பவரே அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட நிலையில் இலங்கைக்கு திருப்பிஅனுப்புவதற்காக தடுத்து வைக்கப் பட்டுள்ளவராவார். (4)

# சிஹல உறுமயவுக்குள் பிளவு
# தலைவர் உட்பட 8பேர் விலகினர்!

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற பதவி தொடர்பாக சிஹல உறுமய கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் கட்சித்தலைவர் எஸ். எஸ். குணசேகர உட்பட எட்டுப்பேர் கட்சியிலிருந்து விலகியுள்ளனர்.

நேற்று நடைபெற்ற சிஹல உறுமய கட்சியின மத்திய செயற்குழுக் கூட்டத்திலேயே இந்தப் பதவி விலகல் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பதவி விலகிய கட்சியின் உபதலைவர்களான கலாநிதி எ. டி. பி. எஸ். இந்திரரத்தின, மேஜர் ஜெனரல்திலக் பரணக்கம, லெப்டினன்ட் கேணல் அனில் அமலசேகர பிரதிச் செயலரான கலாநிதி டி. எஸ், பி. எஸ். திஸாநாயக்க, செயற்குழு அங்கத்தவர்களான காமினிபெரேரா கலாநிதி ரஞ்சினிரத்தினபாலமாலிங்கெமன் குணரெத்தின ஆகியோரே கட்சியிலிருந்து விலகியவர்களாவர். (வ-5)

## ஈ.பி.டி.பி. எம்பிக்கள்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாக அக்கட்சியின் செயலாளர்நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி.யின் யாழ்மாவட்டபிரதம அமைப்பாளர் கே. வி, குகேந்திரன் (வி. கே, ஜெகன்) ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தலைவர்என். மதனராஜன், ஈ.பி.டி.பியின் ஆலோசகர் டாக்டர் விக்னேஸ்வரன் ஆகியோர் எம்பிக்களாக நாளை பதவியேற்கவுள்ளனர். -ந-

## தேர்தலுக்குப் பின்பு 81வன்முறைகள்

(கொழும்பு)

பொதுத்தேர்தல் முடிவடைந்து நேற்றுவரை நாடு முழுவதிலும் 81 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

இந்த வன்முறைச் சம்பவங்களில் ஒரு கொலை, இரண்டு துப்பாக்கிச் சூடுகள், மற்றும் நான்கு தீவைப்புச் சம்பவங்கள் என்பன இடம்பெற்றுள்ளன.

ஐக்கியதேசியக் கட்சி 34 முறைப்பாடுகளையும், பொதுஜன ஐக்கியமுன்னணி 33 முறைப்பாடுகளையும், ஏனைய கட்சிகள் 14 முறைப்பாடுகளையும் பதிவுசெய்துள்ளதாக பொலிஸ் தேர்தல் செயலகம் மேலும் அறிவித்துள்ளது. -4

## ஐக்கிய தேசியக்கட்சியின
# தேசியப்பட்டியல்எம்.பிக்களில் மூவர்தமிழர்; இருவர் முஸ்லிம்கள்

(கொழும்பு)

பதினோராவது பாராளுமன்ற பொதுத் தேர்தலில் தேசியப் பட்டியலில் இடம் பெறும் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விபரங்களை ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, சிஹலஉறுமய, தேசிய ஐக்கிய முன்னணி ஆகியகட்சிகள் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பிக்கள் பன்னிருவரில் மூன்று தமிழர்களும் இரு முஸ்லிம்களும் அடங்குவர். வி. பி. தேவராஜ், எம். எஸ். செல்லச்சாமி, கணபதி கனகராஜ் மற்றும் ஏ.எச்.எம். அக்பர், அப்துல் மஜீர் ஆகியோர் எம். பிக்களாகியுள்ளனர்.

இதே வேளை பொது ஜன ஐக்கிய முன்னணி இன்னமும் தேசியப் பட்டியல் எம்.பிக்களின் பெயர்களை வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. [வ-5]

## வன்னிக்குபொருட்கள் அனுப்பிவைப்பு

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதி மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் நேற்று 'பிரமனாளன் குளம்' சோதனைச் சாவடியூடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட இப் பொருட்களில்

## திருமலையில் இன்று ஆர்ப்பாட்டம்

(திருமலை)

கடந்த பொதுத் தேர்தலில் திருமலை மாவட்டத்தில் பொது ஜனஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட்டு நான்காவது இடத்தைப் பெற்ற ''திடீர் தௌபீக்'' இன் வாக்குகளை மீண்டும் எண்ண வேண்டும் என்றும், பொது ஜனஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியலில் இவருக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று கோரியும் முஸ்லிம் வாக்காளர்கள் இன்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளார்கள். (வ)

## கடற் படையினர் தாக்கினர்

திருமலை கன்னியா பகுதியில் வயல் வேலைக்கு சென்ற தொழிலாளர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினருக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே இடம் பெற்ற சம்பாசனையின் போது, மொழிப்பிரச்சினை காரணமாகவே இத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

**மந்திரகளாகி...**

முன்வராது போனால் சத்தியாக்கிரகம் இருக்கப் போவதாக பௌத்த பிக்குகளின் மற்றொரு சாரார் சிங்களக் கட்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**நோர்வே....**

வெளியிட்டிருந்தது.

இலங்கையில் இடம் பெற்று வரும் உள்நாட்டு யுத்தம் தொடர்பாக நோர்வே மத்தியஸ்தம் முடிவுக்கு வரவில்லை என்றும், இம்மாத முற் பகுதியில் நோர்வேயின் மத்தியஸ்தம் தொடர்பாக அரச உயர்மட்ட அதிகாரிகள் வெளியிட்ட முரண்பட்ட கருத்துக்கள் தொடர்பான விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்காக லக்ஷ்மன் கதிர்காமர் நோர்வே தலைநகர் ஒஸ்லோவுக்கு வரத்திட்டமிட்டுள்ளதாகவும் நோர்வே போஸ்ட் தெரிவித்துள்ளது.

பிரதமர் ரட்ணசிறிவிக்ரமநாயக்க பத்திரிகையாளர் மாநாடொன்றில் ''நோர்வேயின்சமாதான முயற்சிபழைய கதை,, நோர்வேகாரர் விரும்பியதைசெய்யட்டும்' அரசாங்கம்விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தத்தை உக்கிரமாக

**புலிகளிடமிருந்து..**

பட்டுவருகின்றன.

எவ்வாறாயினும் மக்களுக்காக ஆற்றப்படவேண்டிய பெரும்பணியை அரசாங்கம் நிறைவேற்றியே தீரும் என்

## போசாக்கின்றி
## 28 குழந்தைகள் பலி

தாக பௌத்த பிக்குகளின் மற்றொரு சாரார் சிங்களக் கட்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பிக்குமார்களில் இன்னுமொரு சாரார் சிறுபான்மை தமிழ் முஸ்லிம் கட்சிகள் குறைந்தளவு எம். பிக்களுடன் ஏழு எட்டு அமைச்சுக்களைப் பெற்றுக் கொள்ள பார்க்கின்றனர். ஆனால் பத்து உறுப்பினர்களைக் கொண்ட மக்கள் விடுதலை முன்னணி பொது ஜனஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பது மக்கள் விடுதலை முன்னணியைக் கோரவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

## போசாக்கின்றி 28 குழந்தைகள் பலி

(வவுனியா)

வன்னிப்பகுதியில் போஷாக்கு குறைபாடு காரணமாக கடந்த 9 மாதத்தில் 28 குழந்தைகள் இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இக்குழந்தைகள்யாவும் பிறந்து ஒருமாதமாகாத நிலையிலேயே போஷாக்கின்றி இறந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன (வ)

னைச் சாவடியூடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட இப்பொருட்களில் உணவுப் பொருட்கள் மற்றும் வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்துப் பொருட்கள், சிறுகட்டில்கள், இறப்பர் மெத்தைகள், தொட்டில்கள் போன்றன உள்ளடக்கப்படுகின்றன. (4)

**புலிகள் தரப்பில்.-**

கதிரவேலு பிரேமினி
[கிளிநொச்சி]

மட்டுவிலில் எற்பட்ட மேதலில் உயிரிழந் துள்ளதாகவும் புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது. (வ)

யின்சமாதான முயற்சிப்பிழைய கதை,, நோர்வேகாரர் விரும்பியதைசெய்யட்டும் அரசாங்கம்விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தத்தை உக்கிரமாக முன்னெடுத்துச் செல்லும் என்று தெரிவித்திருந்தார்.

பிரதமரின் இக் கூற்றுக்குப் பதிலளிக்கும் வகையில் நோர்வே அரசின் விசேட பிரதிநிதி எரிக்ஹோல்கைம், நோர்வே தனது சமாதான முயற்சிகளை இடைநிறுத்தாது தொடரும் என்றும் அறிவித்துள்ளார்.

தேர்தல்முடிவடைந்த நிலையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் பொதுஜனஐக்கிய முன்னனியின் நிலைப்பாட்டில் தலைகீழான மாற்றமொன்று ஏற்பட்டுள்ளது. தேர்தல் பிரசார வேளைகளில் தெரிவிக்கப்பட்ட சூடான கருத்துக்கள் தவறான அபிப்பிராயங்களை ஏற்படுத்தியிருக்கும் என்பதை அமைச்சர் கதிர்காமர் ஏற்றுக் கொண்டதாக நோர்வே போஸ்ட்டின் கொழும்பு நிருபர் கூறியுள்ளார்.

சமாதானம் தொடர்பாக விடுதலைப் புலிகளும் தவறான நிலைப்பாட்டை கொண்டிருப்பதாக அமைச்சர் கதிர்காமர் குற்றம்சாட்டியதுடன் புலிகளிடம் இருந்து சாதகமானபதில் எதனையும் நோர்வேயால் பெற்றுத்தர வில்லை என்றும் கூறியுள்ளார். இதேவேளை தேவையாயின் சமாதானப் பிரதிநிதியை வரவேற்க இலங்கை எப்போதும் தயாராக இருக்கிறது என்றும் கதிர்காமர் மேலும் தெரிவித்தார். (வ)

படுவருகின்றன.

எவ்வாறாயினும் மக்களுக்காக ஆற்றப்படவேண்டிய பெரும்பணியை அரசாங்கம் நிறைவேற்றியே தீரும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

**ஜனாதிபதி..**

தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளார்.

மும்பே கிறிஸ்கான்டி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் பிரதமர் வாஜ்பாய் மருத்துவ மனையில் இருந்தவாறே தனது வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளார். (வ)


வெளிவந்துவிட்டது
G. C. E (O-L)
இற்கான மாதிரி வினாத்தாள்
விற்பனையாகின்றது.
கிடைக்குமிடம்
மக்மில்லன் புத்தக நிலையம்
3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-884)



ஸ்ரீ செல்வா
(யாழ்ப்பாணம்)
பிரேம்குமார், குஷ்பு
நடித்த
குரோதம்
புதிய வெளியீடு CD பிரதி
தினசரி
10-30, 2-30 (ப.நே)
(கி-688)



இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்வு அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.